**தலைப்பு 320 - சிவில் பாதுகாப்புத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும்,

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1.6.1(இ) | நிறுவனத்தின் கணக்குகளை அறிக்கையிடும் அடிப்படையின் கீழ் படையணி செயற்திட்டத்தில் பேணப்பட்டு வருகின்ற நீண்டகாலப் பயிர் செயற்திட்டத்தின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உரிய பெறுமதியை சரியாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான 51 காணித் துண்டுகள், 113 கட்டிடங்கள், 1,360 ஏக்கர் | இச்சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இச்சொத்துக்களை ஆவணப்படுத்தி கணக்கீடு செய்தல் வேண்டும் மற்றும் பெறுமதிகளை |

| | | |
|---|---|---|
| நிலத்திலுள்ள நிரந்தர பயிர்களுக்குரிய 48,470 மரங்கள் என்பவற்றின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | கணக்காய்விற்கு வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) 4 வகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றின் இறுதி மீதிகளின் மொத்தம் ரூபா 962.3 மில்லியனாக இருந்த போதிலும் அச்சொத்துக்களின் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் இறுதி மீதிகளின் மொத்தம் ரூபா 945.1 மில்லியனாக இருந்ததனால் ரூபா 17.2 மில்லியன் தொகையான வித்தியாசம் காணப்பட்டது. மேலும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தலாக திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளில் ரூபா 27.33 மில்லியன் காட்டப்பட்டிருந்தும் நிதிக் கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 15.79 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தமையின்காரணாக ரூபா 11.54 மில்லியன் தொகையான வித்தியாசம் காணப்பட்டது. | உரிய வித்தியாசங்களை திறைசேரியின் அரசாங்க நிதித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து தீர்த்து வைத்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வித்தியாசங்களை இனங்கண்டு மீதிகளைச் சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் பயன்படுத்தப்படுகின்ற 91,349 சதுரஅடி மற்றும் 2,380 சதுர | உரிய கட்டிடங்கள் மற்றும் காணித் துண்டுகளின் உரிமையை உறுதிப்படுத்தி விரைவாக ஒரு அறிக்கையினை | உரிய காணித் துண்டுகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் |

| | | | |
|---|---|---|---|
| | மீற்றர் அளவான 85 கட்டிடங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகள், தற்காலிக நிர்மாணங்கள், ஏனைய தேவைப்பாடுகள் என்பவற்றிற்காக பயன்படுத்தப்படுகின்ற 214 ஹெக்டயர்களுக்குரிய 66 காணித் துண்டுகளின் உரிமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆவணங்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா 37 மில்லியன் பெறுமதியான சொத்துக்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதியற்ற சொத்துக்களின் மீதி சம்பந்தமாகப் பரீட்சித்து தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | மீதிகளுக் கிடையிலான வித்தியாசத்தை காண்பதற்கும் கணக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்களுக் குரிய பெறுமதிகளை கணக்காய்விற்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மதிப்பீட்டினை முடியுமான அளவுக்கு முழுமையாகவும் சரியாகவும் தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும் 17 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 7.2 பில்லியன் மொத்த தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1.3 பில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடும், 07 மூலதன செலவு விடயங்களுக்கான ரூபா 202.36 பில்லியன் மொத்த தொகையான | ஆண்டின் இறுதியில் கட்டுநிதி கிடைக்காமையும் காணப்படுகின்ற கொரோனா நிலைமையின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகைகள் மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையிலும் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டினை முடியுமான அளவுக்கு சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தேறிய நிதி ஏற்பாட்டில் ரூா 109.66 பில்லியன் மொத்த தொகையான நிதிஏற்பாடும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.
அச்சேமிப்புக்களின் அளவானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 6 சதவீதத்திலிருந்து 77 சதவீதம் வரையான வீச்சுடைய அளவாக இருந்தது. மேலும் 320-01-01-1203 ஆம் இலக்க செலவு விடயத்திலிருந்து ரூபா 80 மில்லியன் தொகையானது 320-01-01-2509 ஆம் இலக்க செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் இவ்வாறு மாற்றப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 58.56 மில்லியன் அல்லது 73 சதவீதம் ஆண்டில் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நி.பி 94(1) மற்றும் 214 பிரமாணங்களை கருத்தில் கொள்ளாது நடவடிக்கை எடுத்ததன் காரணமாக ஆண்டு இறுதியின் போது மூன்றாந் தரப்பினருக்கு செலுத்துவதற்கு இருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 269.4 மில்லியனாக இருந்ததுடன் அப்பெறுமதியினுள் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட417 பொறுப்பு விடயங்களின் பெறுமதி ரூபா 175.9 மில்லியனாகும். | கொரோனா நிலைமையின் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் தாமதமடைந்ததனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. | பொறுப்புக்களை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நி.பி 94(2) மற்றும் (3) இன் கீழ் கொண்டு வரப்படாத மூன்று செலவின விடயங்களின் ரூபா 43.5 மில்லியன் கூட்டு மொத்த பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து இச்செலவுத் தலைப்பின் பொறுப்புக்கள் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நி.பி இன் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டிய பொறுப்புக்கள் மாத்திரம் வெளிப்படுத்தப் படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 13 அரசாங்க நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய ரூபா 113.2 மில்லியன் கூட்டு மொத்தமான பொறுப்பு மீதிகள் உறுதிப்படுத்தப்படவில்லை. | உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ள துடன் அக்கடிதங்களின் பிரதி உங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் மீதியினை உறுதிப்படுத்தி அனுப்புமாறு உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |

**2.3 ஏனைய நிறுவனங்களினால் வழங்கிய நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களினால் 284-1-1-8-210 ஆம் இலக்க செலவு விடயத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 2.5 மில்லியன் அல்லது 32 சதவீதம் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. | பொருட்களை வழங்குவதற்கு முடியாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | ஏனைய திணைக்களங் களால் வழங்கிய நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல் வேண்டும். |

**2.4 முற்பணம் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) சேவையை விட்டுச் சென்றுள்ள 76 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 10.5 மில்லியன் தொகையான இடர், விழா மற்றும் விசேட முற்பணக் கடன்மீதிகளை அறவீடு செய்தல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன் இக்கடன் மீதிகள் மூன்று ஆண்டுகளை மிகைத்திருந்தன. | உரிய கடன் மீதிகளை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவில் காட்டப்படுகின்ற ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இக்கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணங்கள் ‘‘பீ’’ கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 02 இலிருந்து இலக்கம் 05 வரையான படிவங்களில் பிரதான நிதி உத்தியோகத்தர் கையொப்ப மிட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அனைத்து பின்னிணைப்புக்களும் பிரதான நிதி உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்படும். | 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**2.5 வங்கி கணக்குகளைச் செயற்படுத்துதல்**

வங்கி கணக்குகளைச் செயற்படுத்துதல் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கிற்காக் 2020 நவம்பர் மாதத்திலிருந்து 2021 மே மாதம் வரையான மாதாந்த வங்கி கணக்கிணக்கத்தின் விபரம் 2021 யூன் மாதம் வரை மிகவும் தாமதித்து தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கொரோனா நிலைமையின் அடிப்படையில் தலைமையகம் சில மாதங்கள் மூடப்பட்டிருந்ததனால் இத்தாமதம் ஏற்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் வங்கி கணக்கிணக்கத் தினைத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | மேற்கூறிய வங்கி கணக்கின் ரூபா 21.4 மில்லியன் மொத்தப் பெறுமதியான 102 காசோலைகள் வழங்கி 06 மாதங்களை மிகைத்த பின்னரும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அக்காசோலை சம்பந்தமாக நி.பி 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 மாதங்களை மிகைத்த காசோலைகள் சம்பந்தமாக நி.பி 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | காலங்கடந்த காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மேற்கூறிய வங்கிக் கணக்கில் இரண்டு மாதங்களிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் வரையான காலப்பகுதியாக காணப்படுகின்ற இனங்காணப்படாத வைப்புச் | உரிய மீதிகளை இனங்காண்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இம்மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்தல்கள் மற்றும் இனங்காணப்படாத கொடுப்பனவுகளின் பெறுமதி முறையே ரூபா 15.79 மில்லியன் மற்றும் ரூபா 145,979 ஆக இருந்ததுடன் இம்மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**2.6 கட்டுநிதிகளைப் பெற்றுக்கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் ரூபா 20,289.6 மில்லியன் மொத்த தொகையான கட்டுநிதிகள் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் கிடைத்த மொத்த கட்டுநிதிகளின் பெறுமதி ரூபா 16,347.2 மில்லியனாக இருந்ததனால் ரூபா 3,942.4 மில்லியன் அல்லது 19 சதவீதம் அளவில் கிடைத்திருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | கட்டுநிதித் தேவைப்பாட்டினை பொதுத் திறைசேரிக்கு உரிய காலத்தில் சமர்ப்பித்து கட்டுநிதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரச் சட்டம் | திணைக்களம் பயன்படுத்துகின்ற 26 மோட்டார் வாகனங்கள் மற்றும் 28 மோட்டார் சைக்கிள்கள் அரசாங்க வருமான பத்திரங்களைப் பெற்றுக் | உரிய வாகனங்களுக்காக வருமான உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டிற்காக ஈடுபடுத்துகின்ற வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரத்தினை பெற்றுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்ளாது செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | | கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103(1)(ஆ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 26 வாகன விபத்துக்கள் தொடர்பான நட்டங்கள் சம்பந்தமாக பொலிசுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. அத்துடன் நட்டங்களின் பெறுமதியும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வாகன விபத்துக்களால் வாகனங்களுக்கு ஏற்படுகின்ற நட்டங்கள் சம்பந்தமாக பொலிசுக்கு அறிவித்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(3), (4) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 26 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தொடக்க அறிக்கையும் முழுமையான அறிக்கையும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (iii) | நிதிப்பிரமாணம் 110 | திணைக்களத்தினால் கடந்த 05 ஆண்டுகள் காலத்தினுள் நட்டங்களை அறிக்கையிடுவதற்கு நட்டப்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டிலிருந்து நட்டங்கள் பதிவேட்டினை நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 770(4) மற்றும் 770(அ)(ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் செயற்பாட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை கைதவரிப்புச் செய்வதற்கு நடவடிக்கை | உரிய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அவ்வாகனங்கள் தற்பொழுது பொருள் இருப்பு பதிவேட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் | ஓடுவதற்குத் பொருத்தமற்றது என தீர்மானிக்கப் பட்டுள்ள வாகனங்கள் சம்பந்தமாக மேற்கூறப்பட்ட நிதிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருக்க வில்லை. | விரைவாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891 | திணைக்களத்தின் பிணை வைக்க வேண்டிய 10 நிறைவேற்று பதவிகள் மற்றும் 03 நாடளாவிய பதவிகளின் உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்காததுடன் பிணைப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை | பிணை வைக்கும் நடவடிக்கையை விரைவாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் கள் உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைப்பதற்கும் பிணைப் பதிவேட்டினை பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | நிதிப்பிரமாணம் 1645 | திணைக்களம் பயன்படுத்துகின்ற 324 வாகனங்களுக்காக சம்பவ குறிப்பு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை | அனைத்து வாகனங்களுக்குமாக எதிர்காலத்தில் சம்பவ குறிப்பு புத்தகங்களைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களுக்கான சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பேணப்படுதல் வேண்டும். |
| (vii) | நிதிப்பிரமாணம் 1646 | பயன்படுத்துகின்ற 554 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்புக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து நி.பி 1646 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த பொழிப்புக்களும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (viii) | நிதிப்பிரமாணம் 1647(உ) | திணைக்களத்தினால் பேணப்பட்ட வாகனம் பதிவேட்டில் ஒவ்வொரு வாகனத்தையும் ஒப்படைத்த திகதி அல்லது பொறுப்பேற்ற திகதி பதியப்பட்டிருக்க வில்லை. | மேற்கூறிய தகவல்களை வாகனப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய விபரங்களை உள்ளடக்கி வாகனப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 554 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் அல்லது முன்னைய ஆண்டுகளில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த ஆண்டின் போது எரிபொருள் பரிசோதனையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்கூறிய சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து எரிபொருள் பரிசோதனையை மேற்கொண்டு அதன் அடிப்படையில் ஒட்ட அட்டவணையை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த பெறுபேறுகளைப் (Outcome) பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் மன்னார் கொண்டச்சி பிரதேசத்தில் 1200 ஏக்கர் அளவான (45000 மரமுந்திரிகை மரஙளுக்கு அண்மித்தவை) மரமுந்திரிகை பயிர் செயற்திட்டமானது நீண்ட காலமாக பேணப்பட்டு வருவதுடன் கடந்த 4 ஆண்டுகளின் வருமானத்தையும் செலவையும் ஒப்பீடு செய்த போது ரூபா 12.6 மில்லியன் வருமானத்தை மிகைத்த செலவு காணப்பட்டது. மேலும் இதற்காக ஈடுபடுததப்பட்ட 262 சிவில் பாதுகாப்பு படையினரின் சம்பள செலவுகளை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் செயற்திட்டத்தின் நட்டம் மேலும் அதிகரித்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. காட்டு யானைகளின் அச்சுறுத்தலின் காரணமாக பாதுகாப்பிற்கு மாத்திரம் 186 படையினர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் முந்திரிகை மரங்களுக்கு | எதிர்காலத்தில் காணியை சுற்றி யானை வேலியினை நிர்மாணிப்பதற்கும் மரமுந்திரிகை மரங்களுக்கு இலக்கமிடுவதற்கும் விளைச்சலை செய்வதனை முறையாக மேற்பார்வை செய்வதற்கும் போதியளவு களஞ்சிய வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பயிர்ச் செய்கையின் விளைச்சலை அறுவடை செய்தல் மற்றும் களஞ்சியப் படுத்தலை முறையாக முகாமைத்துவம் செய்து செலவுகளைக் குறைத்து எதிர்பார்த்த பேறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இலக்கமிட்டு ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. மேலும், முந்திரிகை விளைச்சலை அறுவடை செய்து ஏடுகளில் பதிதலானது முறைப்படியாக மேற்பார்வை செய்யப்படாது இடம்பெற்றிருந்ததுடன் மரமுந்திரிகை விளைச்சலை களஞ்சியப்படுத்துவதற்காக போதிய களஞ்சிய வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களம் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளுக்கான பிரதான பெறுகை திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பேணப்பட வேண்டிய திட்டத்தை தயாரிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மைச் சுற்றறிக்கையின் 4.2.1 ஆம் வழிகாட்டிக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அக்போபுர பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சீமெந்துக் கல் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 798,445 தொகையான மூலப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் சீமெந்துக் கல் விற்பனையின் மூலம் உழைத்த ரூபா 1.1 மில்லியன் தொகையான வருமானம் பல நாட்களாக கையில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பிராந்திய ரீதியாக விலை மனுக்கோரி செயற்திட்டத்திற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் விற்பனையின் மூலம் கிடைத்துள்ள அனைத்து பணமும் தற்பொழுது செலவு வைக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யும் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செய்யப்பட வேண்டியதுடன் விற்பனை வருமானங்கள் தாமதமின்றி வங்கியில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) பாதுகாப்பு அமைச்சிற்குச் சொந்தமான 13 வாகனங்களும் 19 மோட்டார் சைக்கிள்களும், சனாதிபதி அலுவலகத்திற்குச் சொந்தமான 6 வாகனங்கள், அமைச்சரவை அலுவலகத்திற்குச் சொந்தமான 4 வாகனங்கள் மேலும் சில அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சொந்தமான 10 வாகனங்கள் என்பன நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் இவ் வாகனங்களின் சட்டரீதியான உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பொறுப்பேற்ற வாகனங்களின் சட்டரீதியான உரிமையைப் பொறுப்பேற்பதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய வாகனங்களின் சட்ட ரீதியான உரிமையை விரைவாக பொறுப்பேற்றல் வேண்டும். |
| (ஆ) கொண்டச்சி மர முந்திரிகை செய்கைக் காணியில் முந்திரிகைகளை வெட்டும் இரண்டு இயந்திரங்கள் மற்றும் 12 மில்லி மீற்றர் அளவிலான 132 இருப்புக் கம்பிகள் என்பன 2017 ஆம் ஆண்டிலிருந்து குறைத்த பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டன. | உரிய இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்காக பொருத்தமான வேலைத்திட்டங்களைத் தயாரிப்பதற்கும் 132 இருப்பும் கம்பிகளையும் ஏனைய நிர்மாண நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்ட சொத்துக் களிலிருந்து விளைதிறனான பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்டதெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான 11 வாகனங்களைத் திருத்தம் செய்வதற்காக தனியார் | திருத்தம் செய்தல் தாமதமடைந்துள்ள வாகனங்களை விரைவாக திருத்தம் செய்து பெற்றுக் கொள்வதற்கும் வாகனங்களை திருத்தம் செய்யும் செயல் | வாகனங்களை திருத்தம் செய்தல் விரைவாகவும் ஆக்கபூர்வமாகவும் செய்யப்பட வேண்டியதுடன் திணைக்களத்தின் |

| | | |
|---|---|---|
| வாகனத் திருத்துமிடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தும் ஒரு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் வரையான காலப்பகுதிகள் தற்பொழுது எடுத்திருந்தும் உரிய வாகனங்களை திருத்தம் செய்தல் முடிவுறுத்தப்பட்டு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. நீண்டகாலமாக தனியார் வாகன திருத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததனால் வாகனங்களின் உதிரிப் பாகங்களும் பல்வேறு துணைக் கருவிகளும் காணாமல் போவதற்கும் மழையினாலும் வெயிலினாலும் ஏற்படும் பாதிப்புக்கள் இடம்பெறுவதற்கும் நீண்டகாலமாக பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டுள்ளதனால் வாகனங்களின் நல்ல நிலையில் காணப்படுகின்ற செயற்படுகின்ற பாகங்கள் சுயமாகவே செயற்படாமல் போவதும் ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு தடவை நடாத்துவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை முறையாக முகாமைத்துவம் செய்து பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| துவிச்சக்கர வண்டிகளுக்கு எம்பிலிபயர் தொகுதிக்கு மற்றும் திருகோணமலை படையணி தலைமையத்தின் பிரதான களஞ்சிய கட்டிடத்திற்கு தீப்பிடித்ததன் காரணமாக ஏற்பட்ட ரூபா 342,320 தொகையான நட்டங்களும் 26 | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் அந்நட்டங்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டங்கள் நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப் படுதல் வேண்டும். |

வாகனங்களுக்கான வாகன விபத்துக்களால் ஏற்பட்ட நட்டங்களும் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதனால் 10 வாகனங்களுக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 141,359 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதியான 16 வாகனங்கள் சம்பந்தமான நட்டங்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான பௌதீக வளங்கள், மனித வளங்கள், உள்ளக நிதிகள் என்பவற்றைப் பயன்படுத்தி 22 படையணிகள் மற்றும் 05 பயிற்சி பாடசாலைகளின் மூலம் பல்வேறு தன்மையான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு வந்த போதிலும் திணைக்களம் தமது தூரநோக்கு செயற்பணி மற்றும் செயற்பாடுகளின் கீழ் அவ்வாறான செயற் திட்டங்களை பேணுவதனையும் இனங்கண்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | திணைக்களம் தமது தூரநோக்கு மற்றும் செயற்பாடுகளை நிகழ்கால தேவைப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு இணங்க இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மஹா ஓயா படையணியின் செங்கல் உற்பத்தி செயற் திட்டத்தில் 782,326 செங்கல் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்ட நட்டத்தினை பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர் களிடமிருந்து தீர்த்து வைப்பதற்கு புலனாய்வுச் சபையினால் 2018 யூலை | கருத்துரைகள் தரப்படவில்லை. | நட்டங்களை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

03 ஆந் திகதி சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும் நட்டத்தை அறவீடு செய்வதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களம் ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்குச் சொந்தமான 51 ரூட்களான 12 காணித் துண்டுகள் மற்றும் 34,286 சதுர அடிகளான 42 கட்டிடங்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் இக்காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையைப் பொறுப்பேற்பதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமான பதிவேடு களைப் பரீட்சித்து மேலதிக நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களைப் பராமரிப்பதற்காக செலவு செய்ய வேண்டியதனால் இவ்றறின் சட்ட ரீதியான உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களம் அலுவலகத்தை செயற்படுத்துதல், உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் வதிவிட வசதிகளையும் களஞ்சிய வசதிகளையும் வழங்குதல் ஆகிய கட்டிட தேவைப்பாடுகள் தொடர்பான நீண்டகாலத் திட்டத்துக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் சொந்தமான 130,769 சதுரஅடி மற்றும் 2,000 சதுர மீற்றருக்குரிய 128 கட்டிடங்களை தற்காலிகமாக பயன்படுத்த | இக்கட்டிடங்களின் தேவைப்பாட்டினை மீளாய்வு செய்து மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கட்டிடங்களுக்கான தேவைப்பாட்டினை இனங்கண்டு ஒரு நீண்ட காலத்திட்டத்தின் மூலம் கட்டிடத் தேவைப்பாட்டினை பூரணப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்தது. சில கட்டிடங்கள் சுற்றாடல் திணைக்களத்தின் செலவில் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (இ) | முறையாக தேவைப்பாட்டினை இனங் கண்டு கொள்ளாது சிவில் பாதுகாப்பு படையணிக்காக 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 4.7 மில்லியன்ன பெறுமதியான சீரூடைகள் மற்றும் சீருடைத் துணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை களஞ்சியங்களில் மிகுதியாக இருந்ததுடன் தற்பொழுது இந்த இருப்புக்களின் அங்கீகரித்த நியம தரத்திற்கு பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தது. மேலும் கட்டுநாயக்கா படையணி தலைமையகத்தின் சீருடைக் களஞ்சியத்தில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வழங்கப்படாது காணப்பட்ட ரூபா 620,740 பெறுமதியான சீருடைகளும் அவை சாரந்த 14 வகையான பல்வேறு பொருட்களின் 968 விடயங்களின் இருப்புக்களும் காணப்பட்டன. | இந்த மிகை இருப்புக்கள் சம்பந்தமாக விரைவாக தேவையான முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ள வேண்டியதுடன் மெதுவாக அசைகின்ற இருப்புக்களை பொருளாதார நலன்களை வழங்கும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | கட்டுநாயக்கா படையணி தலைமையகத்தின் மூலம் அப்பிரதேசத்தில் 10.5 ஏக்கர்களில் புடலங்காய் மற்றும் அன்னாசி பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் 02 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்த துடன் உரிய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக பங்குபற்றிய 13 நபர்களுக்கு ரூபா 3,862,800 மொத்த தொகை சம்பளங்களுக்காக | தற்பொழுது இந்த இரண்டு விவசாய செயற்திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து படையணி மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கும் மேற்பார்வை சம்பந்தமாகவும் பேணப்பட வேண்டிய ஏடுகள் சம்பந்தமாகவும் வழிகாட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. | செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது செலவுகளின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக கவனித்துப் பார்க்க வேண்டியதுடன் ஏடுகளைப் பேணுவதன் மூலம் முறையாக மேற்பார்வையினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு செய்யப்பட்டிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 978,370 ஆக இருந்தது. இச் செயற் திட்டங்களானது மாவட்ட ஒருங்கினைப்பாளரினால் முறையாக மேற்பார்வை செய்து பதிவேடுகளைப் பேணுதலும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | சேவா வனிதா சங்கத்தினால் திணைக்களத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு பயிற்சிப் புத்தகங்களை தயாரித்து பகிர்ந்தளிப்பதற்காக கந்தளாய் படையணியின் 239 படையினர்கள் மீளாய்வாண்டின் செப்தெம்பர் 12 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 28 ஆந் திகதி வரை ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இக்காலப்பகுதியில் உரிய படையினர்களுக்கு ரூபா 45.1 மில்லியன் தொகையான சம்பளங்கள் செலவு செய்யப்பட்டிருந்தும் அந்நிதி திணைக் களத்தினால் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது பயிற்சிப் புத்தகங்களை தயாரிப்பதற்காக சந்தையில் கொள்வனவு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தி அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | உரிய சம்பளக் கிரயத்தை திணைக் களத்தினால் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் பதவியணியில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 03 வெற்றிடங்கள் மூன்றாம் மற்றும் நாடளாவிய மட்டத்திலுள்ள 54 வெற்றிடங்களை உள்ளடக்கி ஒட்டுமொத்தமாக 4,786 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சேவைத் தேவைப்பாட்டினை கவனத்திற் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் பதவியணியில் ஆரம்ப மட்டத்திலுள்ள 33,111 உத்தியோகத்தர்களுக்கு எதுவித பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட்19 இன்னல் நிலைமையின் காரணமாக கற்கை நெறிகளை ஒழுங்குபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | ஊழியர் பயிற்சியின் மூலம் செயலாற்றலினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |